**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை - 2022 மற்றும் 2023**

---

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் 2022 மற்றும் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுகளுக்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலயமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற சபையின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம், அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் ஒன்று தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலங்கங் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுக் கைநூலின் பந்தி இலக்கம் 6.6 இற்கு இணங்க கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த வரைவு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த வரைவு அறிக்கை 2024 நவம்பர் 20 திகதி அளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நேரத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பண்ணைகளின் இலாப நட்ட நிலைமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | சபையின் கீழ் காணப்படுகின்ற 32 பண்ணைகளில் இரண்டு பண்ணைகள் பயிற்சி நிலையங்கள் என நடாத்திச் செல்லப்படுவதுடன், பால் வினியோகம் / ஒழுங்குபடுத்தல் நிலையமொன்றினையும் உள்ளடக்கியிருந்தது. பண்ணைகளின் இலாப நட்ட நிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (அ) | பண்ணைகளில் மாடின், பொலன்னறுவ, ரிதியகம, ரொசிடா மற்றும் வெலிகந்த ஆகிய பண்ணைகளில் 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டம் பெறும் நிலைமை காணப்பட்டது. அதன்படி, 2023 ஆண்டு உட்பட பண்ணைகளில் இருந்து பெற்றிருந்த திரண்ட நட்டம் ரூபா 1,280,023,484 தொகையாக காணப்பட்டதுடன், இவ்வாறு தொடர்ந்தும் நட்டமடையும் பண்ணைகள், நட்டமடையும் காரணத்தை கண்டு இலாப நிலைமைக்கு மாற்றுவற்கு தேவையான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது ஐந்தாண்டுத் திட்டம் உடனான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நட்டமடையும் பண்ணைகளில் நட்டமடைவதற்கான காரணத்தை கண்டறிந்து இலாப நிலைமைக்கு மாற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கல்பொகுன, கொத்துகச்சிய, ஔயாமடுவ மற்றும் வீரவில ஆகிய பண்ணைகளில் 2022 ஆண்டின் போது இலாப நிலைமையொன்று அறிவித்திருந்த போதிலும், 2023 ஆண்டின் நட்ட நிலைமையொன்று அறிவிக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் அந்தப் பண்ணைகளின் திரண்ட நட்டம் ரூபா 44,584,319 தொகையாகும். மேலும், அந்த இலாப நட்ட நிலைமையிடையே 101 சதவீதம் முதல் 1162 சதவீதம் வரையான கணிசமான மட்டத்தில் முரணொன்று காணப்பட்டது. | இந்த நிலைமையை குறைத்துக் கொள்வதற்காக தற்போது ஐந்தாண்டுத் திட்டம் உடனான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்தத் திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இவ்வாறு இலாப நட்ட முரண்களுக்கான காரணம் எவை என கண்டறிந்து தேவயைான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் வெலிசர பண்ணையில் செயற்படுத்தப்படுகின்ற பால் செயற்திட்டத்தின் மூலம் 2022 | 2023 ஆண்டின் நட்டம் :ரூபா 9,105,012.39 தொகை காணப்பட்டமையால் 2022 | தொடர்ச்சியாக நட்டமடையும் பண்ணைகளை இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| ஆண்டின் போது ரூபா 9,692,514 தொகைக்கான நட்ட நிலைமையொன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஆண்டிலும் உள்ளவாறான நட்டம் ரூபா 9,105,012 தொகையாக காணப்பட்டது. | ஆண்டுடன் ஒப்பிடும் போது 2023 ஆண்டு நட்டம் குறைவடைந்திருந்தது. | அந்த பண்ணைகளை இலாப நிலைமைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களின் படி அந்த 05 வருடங்களுக்குரிய கணிக்கப்பட்ட கணக்கீட்டு விகிதாசாரங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |

| | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| நடைமுறை விகிதாசாரம் | 0.75 | 0.59 | 0.62 | 0.75 | 0.99 |
| திடீர் விகிதாசாரம் | 0.49 | 0.38 | 0.36 | 0.48 | 0.55 |
| மொத்த இலாப விகிதாசாரம் | 27.06% | 19.09% | 17.91% | 32.29% | 33.13% |
| தேறிய இலாப விகிதாசாரம் | (52.5)% | (10.51)% | (11.58)% | (0.28)% | 4.34% |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் | 32 நாட்கள் | 28 நாட்கள் | 25 நாட்கள் | 25 நாட்கள் | 19 நாட்கள் |

| | | | |
|---|---|---|---|
| (அ) | சபையின் நடைமுறை விகிதாரசாரம் மற்றும் திடீர் விகிதாகசம் 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன, 2021 ஆண்டில் உயர்ந்த மட்டத்தை அடைந்திருந்த போதிலும், உகந்த மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. அதன்படி, சபையின் தொழிற்படு மூலதன சிக்கலொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது. | பண்ணையில் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற மூலப் பொருட்களின் விலை அதிகரித்தல் அதற்கு நேரொப்ப முடிவுப்பொருட்களின் விலை அதிகரிக்காமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், எவ்வாறாயினும் ஆரம்ப உற்பத்திகளுக்காக பெறுமதி கூட்டிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் , இந்த நிலைமை எதிர் காலத்தில் | நிறுவனத்தின் தொழிற்படு மூலதன தேவைப்பாடு உகந்த மட்டத்தில் பேணிச் செல்லப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தவிர்க்கப்படும் என நம்பப்படுகின்றது. | |
| (ஆ) | மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேறிய இலாப விகிதாசாரம் 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை குறைவடைந்து காணப்பட்டதுடன், 2020 ஆண்டு முதல் ஆக்கபூர்வமான நிலைமையொன்று காட்டப்பட்டுள்ளது. | சபையின் பிரதான உற்பத்தி ஆகிய தென்னை, நாளாந்த கோழிக் குஞ்சுகள் மற்றும் திரவப் பாலின் விலை நிர்ணயிக்கப்படுகின்றது . நாட்டில் நிலவுகின்ற கேள்வி வழங்கல் படி ஆக காணப்படுவதுடன், விற்பனை விலை மாற்றடைதல் மீது மொத்த இலாபத்திலும் முரண்கள் ஏற்படுகின்றது.இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக எதிர் காலத்தில் அடுத்த 05 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதில் பெறுமதி கூட்டிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் இலாபகரத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கடன் பட்டோர் சேகரிப்புக் காலத்தில் கணிசமான அளவு ஆக்கபூர்வமான மட்டமொன்று காட்டப்பட்டிருந்த போதிலும் ஐந்து வருடங்களை மிகைத்துள்ள மீதிகளை சேகரித்தல் தொடர்பாக மெதுவாக செல்லும் நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது. | கடனுக்கு பண்டங்கள் விற்பனை செய்தல் மற்றும் சேவைகள் வழங்கும் போது முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஏற்படுத்தியிருந்த போதிலும், 10 – 15 வருடங்கள் பழமையான கடன்பட்டோருக்காக சட்ட நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதுடன், அறவிடப்பட முடியாத கடன்பட்டோர் மற்றும் கணக்கீட்டு வழுக்களின் காரணமாக உருவாகிய | நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | கடன்பட்டோர்களை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இவ்வாறான பொருண்மையான கடன்பட்டோர் உருவாதல் ஏற்பட முடியாது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

**3.1.1 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் முன்னேற்றம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2014/01 கொண்ட 2014 பெப்ரவரி 17 திகதிய சுற்றறிக்கையின் பந்தி 5.2 இற்கு இணங்க கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய வருடாந்த பாதீடு, உத்தேச பிரதான முதலீடுகள், கொள்திறனை விரிவாக்கலும் உட்பட வருடாந்த பெறுகைத் திட்டம், மனிதவளத் திட்டம், கடன் திருப்பிச் செலுத்தும் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் உட்படுத்தி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற பால் செயற்திட்டம், டிலயிட் செயற்திட்டம் மற்றும் அங்கீகாரம் பெற்ற விற்பனை நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் காணப்படும் விற்பனை நிலையங்கள் தொடர்பாக எதிர்பார்த்த இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாகவும் உட்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பெறுகை திட்டம் தவிர ஏனைய திட்டங்கள் உட்படுத்தப்பட்டிருந்தது. பெறுகைத் திட்டம் உரிய நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் இந்த அனைத்துத் திட்டங்களும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | மனிதவள அபிவிருத்தித் திட்டம், உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு ஆகியன உட்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தில் 02 பிரதான குறிக்கோள்கள் நிறுவப்பட்டிருந்ததுடன், அந்த குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக 25 தொழிற்பாடுகள் உட்படுத்தி செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அது | 2015 ஆண்டில் கிராமிய பொருளாதார அமைச்சினால் 2015.10.21 திகதி RE/7/216 இலக்கம் கொண்ட எமக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்க வேண்டிய குறிக்கோள்கள் தொடர்பாக | ஒவ்வொரு தொழிற்பாடுகள் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளை திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக 2022 ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரதான குறிக்கோள் 01 இற்குரிய 05 தொழிற்பாடுகள் தொடர்பாக மற்றும் 02 பிரதான குறிக்கோள்களுக்கு உரிய 11 தொழிற்பாடுகள் தொடர்பாக நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள் அந்தத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. | அறிவுறுத்தப்பட்டது. அதன்படி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டதுடன், அவை 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் குறிக்கோள்களுடன் முழுமையாக ஒத்திருக்கவில்லை. | |
| (இ) சபையினால் 2021 – 2025 ஆண்டுகள் அடங்கக்கூடியவாறு கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருந்ததுடன், மீண்டும் 2023 – 2027 ஆண்டுகள் அடங்கக்கூடியவாறு திருத்திய கூட்டிணைந்த திட்டமொன்று 2023 மே 10 திகதி சமர்ப்பித்திருந்தது. அந்த கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது. | | |
| (i) நவீன இனவிருத்தி தொழில்நுட்ப முறைகள் மற்றும் பாசுமாடு முகாமைத்துவ தொழில்நுட்பத்தின் புதிய அறிவினை பயன்படுத்தி மிகவும் சிறந்த பண்ணை விலங்கு முகாமைத்துவ முறைமையுடனான உகந்த களஞ்சியப்படுத்தும் விகிதாசாரத்தை பேணிச் செல்வதற்காக கால்நடைகளின் பண்புசார் தன்மையை அபிவிருத்தி செய்தல் ஆகிய பிரதான குறிக்கோள்களின் கீழ் உள்நாட்டு கால்நடை விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற இனவிருத்திப் பண்டங்கள் ஒவ்வொரு மிருகத் தொகுதியின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் படி எதிர் பார்க்கப்பட்டிருந்தது. அந்த கூட்டிணைந்த திட்டத்தின் படி 2022 ஆண்டின் போது மொத்தம் 13,564 விலங்குகள் இன விருத்திக்காக உள்நாட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அது 11,455 | 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கும் போது அரச கொள்கையின் படி அரசாங்கத்தினால் மீண்டும் ஒருமுறை மாடுகள் இறக்குமதி செய்வதற்காக எதிர்ப்பார்க்கப்பட்டதுடன், அதன் காரணமாக அந்த தரவுகளையும் உட்படுத்தி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தில் மாட்டுச் செயற்திட்டத்திற்கு உரிய அனைத்து இலக்குகளும் கூடிய பெறுமதியில் காட்டப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டு முதல் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமைகள் காரணமாக அந்தத் திட்டங்கள் அவ்வாறு செயற்படுவதற்கு முடியாமல் போனமையால் 2022 ஆண்டின் செயல் | திட்டமிட்டவாறு இலக்குகளை நெருங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விலங்குகள் என அதாவது சுமார் 16 சதவீதம் குறைவாக திட்டமிடப்பட்டிருந்ததுடன், உள்ளவாறாக வழங்கியிருந்த மொத்த விலங்குகளின் எண்ணிக்கை 6,761 தொகையாக காணப்பட்டமையால் ஒட்டுமொத்தமாக எதிர்பார்த்த இலக்கை நெருங்குவதில் முன்னேற்றம் கூட்டிணைந்த திட்டத்தின் படி 49 சதவீதமும், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 59 சதவீதமுமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், 2023 – 2027 கூட்டிணைந்த திட்டத்தின் படி 2023 ஆண்டின் போது 1,388 காளை மாடுகள், 384 காளை எருமைகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அந்த செயற்திட்டத்தின் கீழ் விலங்குகள் ஏதும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்காததுடன், திட்டமிடப்பட்ட 06 செயற்திட்டங்களில் 05 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 06 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நடவடிக்கைத் திட்டத்தில் பசு மாடுகள் செயற்திட்டத்திற்குரிய இலக்குகள் கூட்டிணைந்த திட்டத்திற்கு ஒத்ததாக குறைந்த பெறுமதியில் வைக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் இரண்டாவது பிரதான குறிக்கோளின் கீழ் பண்ணை விலங்குகள் மற்றும் விவசாய உற்பத்தியை மேம்படுத்தல் எனும் குறிக்கோள் தொடர்பாக கூட்டிணைந்த திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட ஆறு வகையான விவசாய உற்பத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. திட்டமிடப்பட்ட உற்பத்திப் பொருட்களின் எதிர்பாரத்த இலக்குகளை நெருங்குவதின் முன்னேற்றம் பசுப் பால் உற்பத்தி, இறைச்சிக்காக கோழிகள் வளர்த்தல் மற்றும் வாணிப கோழி உற்பத்திகள் ஆகிய உற்பத்திகள் தொடர்பாக 38 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையான குறைந்த | நுகர்வோரின் கேள்வி குறைவடைதல் காரணத்தினால் வாணிப கோழிகளின் விற்பனை குறைவடைந்தது. தாய்ப் பரம்பரைக் கோழிகள் பெற்றுக்கொள்வது முடியாமல் போன காரணத்தினால் காடைக் கோழி முட்டை உற்பத்தி குறைவடைந்தது. உருளைக் கிழங்கு தட்டுப்பாட்டின் காரணமாக உற்பத்தி செய்தல் வரையறுக்கப்படல் ஆகிய காரணங்களினால் இலக்காகிய உற்பத்திகள் குறைவடையக் காணமாக இருந்தது. | திட்டமிட்டவாறு இலக்குகளை நெருங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மட்டத்தில் காணப்பட்டது. 2023 – 2027 கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2023 ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி பசுப் பால் உற்பத்தி ஆட்டுப் பால் உற்பத்தி இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகள், வாணிபக் கோழி உற்பத்திகள் மற்றும் காடைக் கோழி முட்டை உற்பத்திகள் ஆகிய பிரிவுகளின் முன்னேற்றம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் இலக்காகிய சதவீதத்திற்கு ஒப்பாக 6 சதவீதம் முதல் 58 சதவீதத்திற்கான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (iii) | 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் இரண்டாவது பிரதான குறிக்கோளின் கீழ் சபையின் அங்கீகாரம் பெற்ற விற்பனை நிலையங்கள் மற்றும் சிறப்புச் சந்தைகள் ஊடாக பண்ணை விலங்குகள், விவசாய மற்றும் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை அதிகரிப்பதற்கு 12 தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 07 தொழிற்பாடுகள் மாத்திரம் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அந்த 07 தொழிற்பாடுகளின் 04 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், 2023 – 2027 கூட்டிணைந்த திட்டத்தின் படி தயிர் உற்பத்தி, ஐஸ்கிரீம் உற்பத்தி, பன்றி இறைச்சி உற்பத்தி மற்றும் பால் உற்பத்தியின் எண்ணிக்கை செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது 22, 33, 60 மற்றும் 31 சதவீத எண்ணிக்கைகளை குறைவாக திட்டமிட்டிருந்ததுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது கிரிடொபி உற்பத்தி, யோகட் உற்பத்தி, UHT பால் உற்பத்தி மற்றும் பன்றி இறைச்சி உற்பத்தி எண்ணிக்கை 17 சதவீதம் முதல் 38 சதவீதம் | நுகர்வோர் கேள்வி குறைவடைதல், நாட்டில் நிலவிய எரிபொருள் கட்டுப்பாடு, பொருளாதார நெருக்கடி மற்றும் இறக்குமதி வரையறைகள் காரணமாக பொதி செய்யும் பொருற்கள் இறக்குமதி செய்வதற்கு முடியாமல் போன காரணத்தினால் இலக்குகளை நெருங்குவதற்கு முடியாமல் இருந்தது. | திட்டமிட்டவாறு இலக்குகளை நெருங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | |
| (ஈ) | 2022 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 49 விவசாய பயிற்சி வழங்கும் அமர்வுகள் ஊடாக 1600 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அனைத்து பயிற்சி அமர்வுகளும் அடங்கக்கூடிய விதமாக 530 விவசாயிகளுக்கு அதாவது 33 சதவீதம் மாத்திரமே பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டில் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வரும் ஆட்கள் வரையறையாக இருந்தது. | இலக்குகளை சரியாக நிறுவுவதற்கும் அந்த எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | உள்நாட்டுக் கேள்வியை பூர்த்தி செய்தலுக்காக மற்றும் கிராம வருமானத்தை உயர்த்துவதற்காக எமது விவசாயிகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்காக செல்வ நிலைக்கு ஆக்கும் குறிக்கோளுடன் பண்ணை விலங்கு உற்பத்தி, உற்பத்திப் பொருட்கள் மற்றும் பண்புசார் தன்மையினை அதிகரித்தல் ஆகிய கொள்கைகளை நெருங்குவதற்காக 2022 ஆண்டில் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 12 பிரதான செயற்திட்டங்களின் கீழ் 110 தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 46 தொழிற்பாடுகளை நெருங்குவதில் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. அவற்றில் 02 தொழற்பாடுகள் ஆகிய அண்ணச் செயற்திட்டத்தின் கீழாகிய ஒரு தொழிற்பாடும் மற்றும் இனவிருத்திக்காக விலங்குகளை வழங்குதல் ஆகிய அலுவல் தொடர்பான முன்னேற்றம் பூச்சிய மட்டத்தில் காணப்பட்டது. | 2022 இல் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை, இறக்குமதி வரையறுக்கப்படல், டொலர்களுக்கான விலை அதிகரிப்பு ஆகிய காரணங்களினால் பண்ணை விலங்கு தொழிலினை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு தேவையான விலங்குணவுகள், மருந்து வகைகள், இனவிருத்திப் பண்டங்கள், உரம் ஆகிய உரிய நியமத்தில் மற்றும் பண்புசார் நிலைமையில் குறிப்பிட்ட காலத்தில் வழங்க முடியாமல் போனது. அதன் காரணமாக பண்ணை விலங்கு செயற்திட்டங்களுக்காக தேவையான உள்ளீடுகளின் பண்புசார் தன்மை குறைவடைந்த காரணத்தினால் அந்த செயற்திட்டங்களின் வெளியீடுகளிலும் குறைந்த முன்னேற்றம் ஒன்றினை காட்டியது. மேலும், பொருளாதார நெருக்கடி காரணமாக நுகர்வோர்களினதும் பால் மற்றும் இறைச்சி சார்ந்த உற்பத்திகளுக்கான கேள்வியும் வரையறுக்கப்பட்டமையால் அனேக பெறுமதி கூட்டிய உற்பத்திகள் நுகர்வோரின் கேள்வியின் படி உற்பத்தி செய்வதற்கு நேரிட்டது. | இலக்குகளை சரியாக நிறுவுவதற்கும் அந்த எதிர்பார்த்த இலக்குகளை நெருங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வ/ப கோழி வளர்ப்பு அபிவிருத்திக் கம்பனி தொடர்பாக 2020 மார்ச் 12 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக பெற்றுக்கொண்டிருந்த அமப/20/0890/217/052 இலக்கம் கொண்ட 2020 ஜூன் 18 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி தற்போது தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு 100 சதவீத பங்குகள் உரிமையையுடைய வ/ப இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி தனியார் கம்பனியை கலைப்பதற்கும் அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு உரித்தாக்குவதற்கும் அந்தக் கம்பனிக்கு சொந்தமான ஒரே பண்ணையான மாவத்த பண்ணையின் பதவியணியினர் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படக் கூடியவாறு தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபைக்கு உள் வாங்குவதற்கும், மாவத்த பண்ணையை தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபைக்கு உரிமையான பண்ணை ஒன்றென பேணிச் செல்வதற்கும் விதிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியை கலைத்து அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை உரித்தாக்கல் 2024 நவம்பர் 20 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வ/ப கோழி வளர்ப்பு அபிவிருத்திக் கம்பனியின் பதவியணியினர் 2022.01.01 முதல் தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபையின் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருந்ததுடன், சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் படி தகைமை பெற்றிருந்த நாள் முதல் அவர்களை சபையின் பதவிகளுக்காக இணைக்கப்பட்டது. இதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்தக் கம்பனி பணிப்பாளர் சபையின் விருப்பத்துடன், கலைப்பதற்கான ஆவணங்கள் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திற்கு அனுப்பும் போது கம்பனிச் செயலாளர்களினால் ஏற்பட்டிருந்த தொழில்நுட்ப வழுவொன்றின் காரணமாக கடன்கொடுத்தோரை கலைத்தல் தாமதம் அடைந்தது. அதன்படி, பிரதான கடன்காரர் ஒருவரான கோல்ட் கொயின் தனியார் கம்பனிக்கு ரூபா 13,569,510 தொகை செலுத்திய பின்னர் கடன்கொடுத்தோரை பதிவழித்து கம்பனியை ஒழித்தல் முடிவடைகின்றது. | கம்பனியின் ஒழித்தல் அலுவல்கள் விரைவாக பூரத்தி செய்ய வேண்டும். |
| (ஆ) | அமப/15/0940/631/018-1 இலக்கம் கொண்ட 2015 ஜூலை 16 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி வ/ப மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனிக்கு சொந்தமான அனைத்து வளங்கள், சொத்துக்கள், பங்குகள் மற்றும் முகாமைத்துவத்திற்குரிய சட்டச் செய்முறைகளின் கீழ் பங்குகள் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் | மகாவலி கால்நடை வர்த்தகக் கம்பனியின் பங்குகளின் உரிமையில் 45% மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்படுவதுடன், அந்தக் கம்பனியின் அனைத்துக் காணிகளின் உரிமையும் மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமானது. காணிகளின் உரிமையை தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு | அமைச்சரவை தீர்மானத்தின் படி உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 திகதி வரை கம்பனியின் பங்குகளின் உரிமையில் 27 சதவீதம் மாத்திரம் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை பெற்றிருந்ததுடன், ஏனைய பங்குகளில் மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான 45 சதவீதமும், நெதர்லாந்து பினேன்சின் இற்கு சொந்தமாக 23 சதவீதமும் மற்றும் மகாவலி வலையத்தின் விவசாயிகளுக்கு சொந்தமாக 05 சதவீதமுமாக உரிமைகள் காணப்பட்டது. 2024 நவம்பர் 24 திகதி வரையும் பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபைக்கு இந்தப் பங்குகளை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | உரித்தாக்கி பங்குகளின் உரிமையை உரித்தாக்கித் தரும்படி மகாவலி அதிகாரசபையிடம் 17 வேண்டுதல் கடிதங்கள் மூலம் வேண்டப்பட்ட போதிலும், அதிகாரசபையினால் உரித்தாக்கிக் கொடுத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| (இ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 248,918,006 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 78,885,206 தொகையாகும். மேலும், அறவீடு செய்தல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 20,539,520 தொகையாகும். இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியில் பண்ணையிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 14,717,977 தொகையாக காணப்பட்டதுடன், தலைமை அலுவலத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 5,821,543 தொகையாகும். மேலும், 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன்பட்டோர் மீதி ரூபா 304,390,309 தொகை வரை அதிகரிக்கப்பட்டு காணப்பட்டதுடன், 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 74,389,748 தொகையாக காணப்பட்டதுடன், அந்த கடன் மீதிகளை அறவீடு செய்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது. | இந்தக் கடன்பட்டோர்களில் எவ்விதத்திலும் அறவீடு செய்ய முடியாது என இனங்காணப்பட்டிருந்த ஊழியர் கடன்பட்டோர் ரூபா 247,730 தொகை மற்றும் வர்த்தக மற்றும் ஏனைய கடன்பட்டோர் ரூபா 5,361,518 தொகை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீதிக் கடன்பட்டோரின் ஒரு பகுதிக்காக தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் அடங்கிய கந்தளாய் சோளச் செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது ஏற்பட்டிருந்த ரூபா 11,947,220 தொகை தொடர்பாக வழக்கு அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை அறவீடு செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர் காலத்தில் நடாத்தப்படும் கணக்காய்வுக் குழுவிற்கு சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கவுள்ளேன். | நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 473,078,089 தொகையாக | 2022 ஆண்டில் காணப்பட்ட கடன்கொடுத்தோர் பெறுமதியாகிய ரூபா 60,276,429 தொகை 2023 | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன், 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்களின் பெறுமதி முறையே 2022 மற்றும் 2023 வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 60,276,429 தொகை மற்றும் ரூபா 50,545,073 தொகையாகும். இந்த செலுத்த வேண்டிய மீதிகளில் 99 சதவீதமும் தலைமை அலுலவகத்திற்கு மற்றும் பண்ணைக்கு செலுத்த வேண்டிய மீதிகளாக காணப்படுவதுடன், அந்த மீதிகளை 2023 திசெம்பர் 31 திகதி வரை தீர்த்திருக்கவில்லை. | ஆண்டளவில் ரூபா 50,545,824 தொகை வரை குறைத்துக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்டது. சபையில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக இதனை தீர்த்தல் தமதமடைந்ததுடன், எதிர் காலத்தில் இந்தப் பெறுமதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2011 ஆண்டு முதல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,689,824 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு 2021 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | இந்தத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தை வினவியதுடன், அங்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எழுத்துமூலம் அறிவித்திருந்தது அமைச்சரவை தீர்மானத்தின் படி அரச நிறுவனமொன்றிற்கு எதிராக வேரொறு அரச நிறுவத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கும் இயலும் காணப்படவில்லை என்பதாகும். அது தொடர்பாக குறிப்பிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, இந்த விடயம் வரிசை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2013 ஆண்டு முதல் காணப்படுகின்ற இறந்த இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளுக்காக பெறவேண்டிய காப்புறுதி நட்டஈடு ரூபா 19,253,926 தொகை 2024 ஒக்தோபர் 15 திகதி வரையும் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | இந்த சிக்கல் தொடர்பாக தற்போது 09 வருடங்கள் போன்ற நீண்ட காலம் முதல் கடிதங்கள் பரிமாறப்பட்டு வருவதுடன், தீர்வொன்று கிடைக்காமையால் அதற்காக தலையீடு செய்ய முடியாதென காப்புறுதி ஒழுங்கூற்றல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டிருந்தது. தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய எதுவித காப்புறுதித் தொகையும் காணப்படவில்லை என 2014 திசெம்பர் 15 திகதி கடிதத்தின் மூலம் காப்புறுதிக் | பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கம்பனியினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், காப்புறுதிக் கம்பனி அந்த நிலைமையை மாற்றியிருக்கவில்லை.அதன் காரணமாக பெற வேண்டிய காப்புறுதி நட்டஈட்டுத் தொகை என காப்புறுதிக் கம்பனியின் இணக்கப்பாடின்றி கணக்கறிக்கைகள் காட்டப்பட்டுள்ள ரூபா 19,253,926 இற்கான பெறுமதியை கணக்குகளில் சீராக்கல் செய்ய வேண்டும். | |
| (எ) | சபையினால் மற்றும் சபைக்கு எதிராக ஊழியர் சிக்கல்கள் தொடர்பாக 02 வழக்கலுவல்களும், சபையின் காணி உரித்தாக்கல் தொடர்பாக 03 சட்ட நடவடிக்கைகளும், வேறு விடயங்கள் தொடர்பாக 26 வழக்கு அலுவல்களும் என மொத்தம் 31 வழக்கு அலுவல்கள் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விசாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்காக சபையினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 570,670 தொகை சட்டச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த வழக்கலுவல்கள் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்ட வருகின்றன. | விரைவாக வழக்கலுவல்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மற்றும் மத்திய வங்கி அறிக்கைகளின் படி 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தி முறையே 506,449,602 தொகை மற்றும் 504,153,360 தொகை லீற்றர்கள் காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தி 3391 மில்லியன் காய்கள் மற்றும் 3170 மில்லியன் காய்கள் காணப்பட்டது. 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக அவற்றில் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் பால் உற்பத்தி முறையே 7,062,151 தொகை மற்றும் 5,552,862 தொகை லீற்றர்கள் காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தி 18 மில்லியன் காய்கள் மற்றும் 14 மில்லியன் | இலங்கையின் வருடாந்த பால் உற்பத்தி 400 மில்லியன் லீற்றர்கள் காணப்பட்டதுடன், எனது சபையின் வருடாந்த பால் உற்பத்தி சுமார் 7 மில்லியன் லீற்றர்களாகும். அதன்படி, நாட்டின் பால் உற்பத்தியில் 1.75% பங்களிப்பு மாத்திரமே. சபையின் பால் உற்பத்தி தேசிய உற்பத்தியின் பாரிய சதவீதம் ஒன்றை அதிகரித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.<br><br>அதாவது, பால் உற்பத்தியை இரு மடங்காக்கிய போதிலும் | உற்பத்திகளை மேலும் அதிகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காய்கள் காணப்பட்டது. அதன்படி, சபையின் பங்களிப்பு 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே பால் உற்பத்தியில் 1.39 தொகை மற்றும் 1.10 தொகை சதவீதம் காணப்பட்டதுடன், தேங்காய் உற்பத்தியில் 0.52 தொகை மற்றும் 0.44 தொகை சதவீதம் ஆகிய மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும், பொதி செய்யப்பட்ட திரவப் பாலிற்கு சந்தையில் கூடிய கேள்வியொன்று காணப்பட்டதுடன், ஏனைய போட்டி நிறுவனங்கள் அந்தச் சந்தையின் தேவைப்பாட்டினை இனங்கண்டு செயற்பட்டிருந்த போதிலும், தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை நாட்டின் பிரதான பால் உற்பத்தியாளராக இருந்த போதிலும், அவ்வாறான சந்தர்ப்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தற்காலத்திற்கு பொருந்தக்கூடியவாறு செயற்பட்டு சந்தையின் பங்கினை அதிகரித்துக் கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நாட்டின் உற்பத்தியின் 3.5% மாத்திரம் ஆகும். அவ்வாறாயினும், தற்போது காணப்படுகின்ற வளங்களை உச்சமட்டத்தில் பயன்படுத்தி வரையறையான நிதி இயலுமையை கொண்டு முடிந்தளவு உற்த்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2022 – 2023 ஆண்டுகளின் போது தென்னைப் பயிர்ச் செய்கைக்கு தாக்கத்தை ஏற்படுத்திய மைடா, வெள்ளைக் கொசுவின் தாக்கம், இரசாயன உரக் கட்டுப்பாடு காரணமாக தேங்காய் உற்பத்தி குறைவடைந்தது.<br><br>பொதி செய்யப்பட்ட திரவப் பாலுக்கு தேவையான பொதி செய்யும் பொருட்கள் நாட்டில் நிலவிய இறக்குமதி வரையறையின் காரணமாக இறக்குமதி செய்வதற்கு முடியாமல் போனமையால் உற்பத்தி வரையறையாகியது. | |
| (ஆ) | நியாயமான விலைக்கு தரமான பண்ணை உற்பத்திகளை வழங்குவதற்காக விற்பனை நிலையங்களை நிறுவுதல் மற்றும் பேணிச் செல்லல் சபையின் பிரதான தொழிற்பாடொன்றென சபையினால் இனங்கண்டிருந்த போதிலும் செயற்படு நிலையில் காணப்பட்ட 05 வர்த்தக நிலையங்கள் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது மூடப்பட்டிருந்ததுடன், கந்தானை பிரதேசத்தில் வைத்தியசாலை ஒன்றில் விற்பனை நிலையம் ஒன்று மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | இந்த விற்பனை நிலையங்களின் வருமான நிலைமை மிகவும் குறைந்த நிலைமையில் காணப்பட்டதுடன், அந்த விற்பனை நிலையங்களை பேணிச் செல்லல் தொடர்ச்சியாக நட்ட நிலைமை ஒன்று காணப்பட்டது. அதன் காரணமாக அந்த விற்பனை நிலையங்களை 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது வெஹரகர விற்பனை நிலையம் வெளித்தரப்பினர் ஒருவருக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதென கருணையுடன் அறிவித்துடன், | சந்தையின் பங்கினை சரியாக ஆய்வு செய்து விற்பனை நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கந்தானை பிரதேசத்தில் வைத்தியசாலையில் வேண்டுகோளின் படி அந்த வைத்தியசாலையில் விற்பனை நிலையமொன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. | |
| (இ) | விலங்குகளின் செறிவான உணவுகளுக்காக செலவிடப்படும் மிகைக் கிரயமொன்றிற்கு தீர்வொன்றாக சபையினால் கால்நடை உணவு உற்பத்தி நிலையமொன்று 2020 ஆண்டில் வீரவில பண்ணையில் ஆரம்பிக்கப்பட்டதென சபையினால் அரச தொழில் முயற்சிகளுக்கான குழுவிற்கு சமர்பிக்கப்பட்டதென செயலாற்றுகை அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த உற்பத்தி நிலையம் செயற்படாத நிலையில் காணப்படாததுடன், 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சபையினால் வெளித்தரப்பினரிடம் உணவுப் பொருட்கள் கொள்வனவிற்காக முறையே ரூபா 1,387,848,584 தொகை மற்றும் ரூபா 1,388,644,393 தொகை கால்நடை உணவிற்காக செலவிடப்பட்டிருந்தது. | பதிலளித்திருக்கவில்லை. | உற்பத்திக் கிரயத்தை குறைப்பதற்கு இயலுமானவாறு தேவையான விலங்குணவுகள் குறைந்த கிரயத்தில் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபையின் 04 பண்ணைகளுக்கு சொந்தமாக ஒரு நாளைக்கு ஒரு தடவையில் 3.75 தொன் கால்நடை உணவு உற்பத்தி செய்யக்கூடிய 04 இயந்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றின் மூலம் ஒரு மாதத்தில் கால்நடை உணவு 900 மெட்ரிக்தொன் (3.75*30நாட்கள்*8 மணித்தியாளங்கள்) தொகை என ஒரு வருடத்தில் 10,800 மெட்ரிக் தொன் உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்த போதிலும், அந்த இயந்திரங்கள் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையான காலம் விளைவற்று காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த இயந்திரங்கள் குறைந்த கொள்திறனுடையதாகவும் மற்றும் பழையதாகவும் காணப்படுவதனால் அவற்றின் செயற்திறன் ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்திருந்தது. அந்த இயந்திரங்களை பயன்படுத்தி கால்நடை உணவு உற்பத்தி செய்யும் போது அலகிற்கான கிரயம் அதிகரிக்கின்றது. அது குறிப்பிட்ட செயற்திட்டத்தின் இலாபத்தை நேரடியாக பாதிப்பதனால் பழைய இயந்திரங்களை முறைப் பிரகாரம் பயன்படுத்துதல் மற்றும் செயற்திறனுடைய இயந்திரங்களை எதிர் காலத்தில் கொள்வனவு செய்து உணவு | விளைவற்ற இயந்திரங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தல் மற்றும் பயன்படுத்தல் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமாக காணப்படாவிடின் முறைப் பிரகாரம் அப்புறப்படுத்தி மிகவும் செயற்திறனுள்ள இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உற்பத்திற்காக பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தேசிய பண்ணை விலங்குகள் அபிவிருத்தி சபையின் கீழ் காணப்படும் 04 பண்ணைகளுக்கு சொந்தமாக கோழி உணவு தயாரிக்கும் 04 இயந்திரங்கள் காணப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக மகாவலி விலங்கு வர்த்தகக் கம்பனிக்கு சொந்தமாக கோழி உணவு தயாரிக்கும் 01 அரைத்தல் மற்றும் கலவை இயந்திரம் இலங்கை கோழி வளர்ப்பு அபிவிருத்தி (தனியார்) கம்பனிக்கு சொந்தமான கோழி உணவு தயாரிக்கும் 02 அரைத்தல் மற்றும் கலவை இயந்திரம் காணப்பட்டது. இவற்றின் மூலம் ஒரு மாதத்திற்கு கோழி உணவு 2580 மெட்ரிக் தொன் (10.75*30நாட்கள்*8மணித்தியாளங்கள்) என ஆண்டிற்கு 30,960 மெட்ரிக் தொன்கள் உற்பத்தி செய்யும் இயலுமை காணப்படுகின்றது. எனினும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த 08 இயந்திரங்களும் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இந்த இயந்திரங்கள் குறைந்த கொள்திறனுடையதாகவும் மற்றும் பழையதாகவும் காணப்படுவதனால் அவற்றின் செயற்திறன் ஒப்பீட்டு ரீதியாக குறைவடைந்திருந்தது. அந்த இயந்திரங்களை பயன்படுத்தி கால்நடை உணவு உற்பத்தி செய்யும் போது அலகிற்கான கிரயம் அதிகரிக்கின்றது. அது குறிப்பிட்ட செயற்திட்டத்தின் இலாபத்தை நேரடியாக பாதிப்பதனால் பழைய இயந்திரங்களை முறைப் பிரகாரம் பயன்படுத்துதல் மற்றும் செயற்திறனுடைய இயந்திரங்களை எதிர் காலத்தில் கொள்வனவு செய்து உணவு உற்பத்தியில் பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விளைவற்ற இயந்திரங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் மற்றும் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமாக காணப்படாவிடின் முறைப் பிரகாரம் அப்புறப்படுத்தி மிகவும் செயற்திறனுள்ள இயந்திரங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தின் பிரதான பதவிகளான 02 பிரதி பொது முகாமையாளர் பதவிகள் மற்றும் 03 உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்படுவதுடன், சபையின் பண்ணை அலுவல்களை உரிய முறையில் பேணிச் செல்வதற்காக தேவையான பிரதான மூன்றாம் மட்ட பதவியொன்றான 28 பண்ணை முகாமையாளர் பதவிகளில் 20 தொகை மற்றும் 22 தொகை வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடமாக காணப்படும் பதவிகளுக்காக தற்போது கடமையாற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமையாற்றுவதற்காக பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மற்றும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இரண்டாம் மட்டத்தில் மொத்த அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 361 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் 154 அங்கீகரிக்கபட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவிகளாக காணப்பட்டதுடன், 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே அந்தத் தொகுதியின் ஊழியர்கள் 24 தொகை மற்றும் 02 தொகை மிகையொன்று காணப்பட்டது. மேலும், ஆரம்ப பிரிவின் சாரதிப் பதவி 01 உம், 09 டிரக்டர் இயக்குனர் பதவிகளும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மிகையாக காணப்பட்டது. | 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் முகாமைத்துவ உதவியாளர் பதவி மிகையொன்று காணப்பட்ட போதிலும் தற்போது அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்றின் படி இருக்க வேண்டிய முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கையாகிய 154 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.<br><br>2023 ஆண்டில் சாரதி ஒருவர் மிகையாக காணப்பட்ட போதிலும், தற்போது 05 சாரதிகளின் பற்றாக்குறை காணப்பட்டது. பண்ணைகளின் வெளிக்கள அலுவல்களின் தன்மைகளின் படி செக்ரோல் டிரக்டர் இயக்குனர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், அந்த பதவிகளில் மிகையொன்று காட்டிய போதிலும், செக்ரோல் தொழிலாளர் பதவிகளில் பற்றாக்குறை காணப்படுகின்றது. செக்ரோல் தொழிலாளர்களின் கடமைகள் மிகையான டிரக்டர் இயக்குனர்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. | ஊழியர் தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ஆரம்ப மட்டத்தில் பயற்சியற்ற ஊழியர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆண் ஊழியர்கள் 25 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளவாறான ஊழியர்கள் 72 பேர் கடமையாற்றியதுடன், அவற்றில் 55 உம் விற்பனை உதவியாளர்கள் என சேவையில் ஈடுபடுத்த்ப்பட்டிருந்தனர். | 2003 ஆண்டு முதல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையினால் நிரவப் பால் பிரபல்யப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் பேணிச் செல்லப்படுகின்ற பால் விற்பனை நிலையங்களுக்காக செக்ரோல் அடிப்படையில் விற்பனை உதவியாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் கடமைச் சுட்டியொன்று அங்கீகரித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், சேவையின் | |

| | | |
|---|---|---|
| | தேவைப்பாட்டின் மீது அவர்கள் கடமையாற்றுவதுடன், 2015 ஆண்டின் பாதீட்டு முன்மொழியின் படி பொது நிருவாக சுற்றறிக்கையின் 25/2014 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 180 நாட்களுக்கு மிகையான காலம் பூர்த்தி செய்துள்ள ஆட்களுக்காக நிரந்தர நியமனம் வழங்கும் அடிப்படையில் விற்பனை உதவியாளர்களின் சேவை நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, 55 விற்பனை உதவியாளர்கள் மிகையொன்று காட்டப்படுகின்றது. | |

### 3.6 வாகனக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் சமூக சேவை நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான 21 வாகனங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 22 வாகனங்கள் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான 37 வாகனங்கள் அவசர வடக்கு மீளமைப்புச் செயற்திட்டத்திற்கு சொந்தமாக 01 வாகனமும், கிராமிய பொருளாதார அமைச்சுக்கு சொந்தமான 01 வாகனமும், விவசாய மற்றும் கால்நடைகள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு சொந்தமான 04 வாகனங்களும், விவசாய அமைச்சுக்கு சொந்தமான 02 வாகனங்களும், கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு சொந்தமான 01 வாகனமுமாக கப் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், டிரக்டர்கள், டேலர்கள், லொறி வண்டிகள், ஜீப் வண்டிகள் என கூட்டுத்தொகை 89 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், 2023 திசெம்பர் 31 திகதி வரை இந்த | இந்த வாகனங்களை உரித்தாக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கமநல சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான 37 வாகனங்களை பதிவு செய்தல் உரிமைகள் பெற்றுக்கொள்வதற்கு வாகனம் உரித்தாக்கல் படிவங்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>சமூக சேவை, நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான 21 வாகனங்களில் HP – 2334 பதிவு இலக்கத்தினை கொண்ட நிஸான் பெற்றோல் வகையைச் சேர்ந்த ஜீப் வண்டி வரிசை அமைச்சின் கால்நடைப் பிரிவின் போக்குவரத்துப் பிரிவிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அமைச்சின் பெயரில் பதிவு | உரித்தாக்கல் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காததுடன், அந்த சில வாகனங்கள் தொடர்பாக 2022 ஆண்டின் போது ரூபா 2,738,868 தொகை மற்றும் 2023 ஆண்டில் ரூபா 5,058,283 தொகையாக திருத்த வேலைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செய்யப்பட்டுள்ள உரிமையுடைய பஜாஜ் CT100 இனத்தை சேர்ந்த 20 மோட்டார் சைக்கிள்களில் 05 மோட்டார் சைக்கிள்களை பெறுமதி மதிப்பீடு செய்து பதிவு செய்தல் உரிமையை சபைக்கு பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 01 மோட்டார் சைக்கில் (VH – 4701) அப்புறப்படுத்தும் நிலைமையில் காணப்படுவதுடன், மீதியான 14 மோட்டார் சைக்கிள்களையும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 17 திகதிய அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த நல்லாளுகைக்கான வழிகாட்டல் கைநூலின் 04 ஆவது அத்தியாயம் பிரிவு 1.2(ஏ) இற்கு இணங்க ஒவ்வொரு 03 மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வுக் குழு நடாத்தப்பட வேண்டும் எனவும், அதில் எடுக்கப்படும் பரிந்துரைகள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சபையினால் 2022 ஆண்டு தொடர்பாக ஒரு கணக்காய்வுக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | திறைச்சேரியின் பிரதிநிதி கணக்காய்வுக் குழுவின் தலைவராக காணப்படுவதனால் அவரின் வேலைப்பழு மற்றும் புதிய பணிப்பாளர் சபையொன்று நியமனம் செய்வதில் தாமதம் அடைந்த காரணத்தினால் குழுக் கூட்டம் முறைப்பிரகாரம் நடாத்துவதற்கு முடியவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |